

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பெரியபாளையம் பேருந்து நிலையத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஜெ.மூர்த்தி தலைமையில் மாவட்ட கழக செயலாளர் எம். எஸ். கே.ரமேஷ் ராஜ் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்றினார்கள் உடன் டி.ஜெ. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, சி.எச். சேகர், பாஸ்கர் சுந்தரம், ஸ்டாலின், கே.வி. லோகேஷ், சம்பத், ரமேஷ், ராமமூர்த்தி, மோகன்ராஜ், ரவிச்சந்திரன்,முகமது மொய்தீன், ஜெயலலிதா சசிதரன், சித்ரா முனுசாமி, சீனிவாசன், ஐ.ராஜா வடமதுரை அப்புன், சிவாஜி,பார்த்திபன், சந்திரசேகர்,இ. ராஜா, உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135ஆவது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாநில மீனவரணி துணை தலைவர், திருவெற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் திருவொற்றியூர் நெடுஞ்சாலை டோல்கேட் பகுதியில் அமைந்துள்ள அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து உறுதிமொழி ஏற்று மரியாதை செலுத்தினார்.

### பர்கூர் மலையில் இருந்து வரும் காட்டாற்று வெள்ளத்தை தோணி மடுவு பள்ளத்தில்

### தடுப்பணைகள் அமைத்து தேக்கி – வனவிலங்குகள்–விவசாயத்திற்கு உதவிடுவீர்! பவானி ஆற்றின் உபரிநீரை

# அந்தியூர் - அம்மாபேட்டை ஏரிகளுக்குத் திருப்பிவிடும் திட்டம் தேவை!

## சட்டப்பேரவையில் – ஏ.ஜி.வெங்கடாசலம் பேச்சு !



சென்னை, ஏப்.18–

**சட்டப்பேரவையில் - மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அந்தியூர் தொகுதி கழக உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், “பர்கூர் மலையில் இருந்து வரும் காட்டாற்று வெள்ளத்தை தோணி மடுவு பள்ளத்தில்! தடுப்பனைகள் அமைத்து தேக்கி – வனவிலங்குகள்–விவசாயத்திற்கு உதவிடுவீர்! பவானி ஆற்றின் உபரி நீரை, அந்தியூர் - அம்மாபேட்டை ஏரிகளுக்குத் திருப்பிவிடும் திட்டம் தேவை!” என்று வேண்டுகோள் விடுத்தார்.**

சட்டப்பேரவையில் ஏ.ஜி. வெங்கடாசலம் பேசியதாவது எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு எனக்கூறி, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களையும், சுயமரியாதைச் செம்மல் அறிஞர் அண்ணா அவர்களையும் வணங்கி, அண்ணாவும், பெரியாரும் கண்ட கனவுகளை நனவாக்கிட காலமெல்லாம் போராடி போராடி நமக்கெல்லாம் நல்ல பல சமூக திட்டங்களைத் தந்து நம் உயிரோடும், உணர்வோடும் வாழ்ந்துவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும் வணங்குகிறேன்.

பெரியாரும், அண்ணாவும், கலைஞரும் நமது வாழ்வில் விளக்கேற்றிச் சென்ற நிலையில் அவர்களின் கொள்கை வாரிசாம் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்களைத் தேடி மருத்துவம், பள்ளிக் குழந்தைகளுக்கு காலைச் சிற்றுண்டி, மகளிர் விடியல் பயணம், கலைஞர் உரிமைத் தொகை, நான் முதல்வன் திட்டம், தோழி விடுதி என ஒரு குடும்பத்தில் அனைவருக்காகவும் உழைக்கும் தந்தைபோல், திட்டங்கள் பல தந்து தமிழ்மொழியும், தமிழ்மக்களும், கல்வியும் உயிர்மூச்செனக் கூறி எல்லோருக்கும் எல்லாம் என்னும் திராவிட மாடல் வைரத்தை பட்டை தீட்டி, இந்த மாநிலம் மட்டுமல்லாது இந்த நாட்டில் உள்ள முதல்வர்களுக்கெல்லாம் முதன்மையானவராய் முன்னோடியாய் திகழும் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

மேலும், செஸ் ஒலிம்பியாட், பார்முலா பந்தயம் உள்ளிட்ட போட்டிகளை தமிழகத்தில் நடத்தியும் தேசிய தடகளம் முதல் தேசத்திற்கான ஒலிம்பிக் வரை தமிழக இளைஞர்களுக்கு, விளையாட்டு வீரர்களுக்கு கலங்கரையாக விளங்கி தமிழ்நாட்டு விளையாட்டுத் துறையை இந்த தேசம் உற்றுப்பார்க்க வைத்து, கொண்ட கொள்கையில் கோமகனாய், இளைய சமுதாயத்தை வாழவைக்கும் தமிழ் மக்களின் செல்லப் பிள்ளை தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

எங்களின் அவை முன்னவர் அவர்களையும், எங்கள் ஈரோடு மாவட்டத்தின் வளர்ச்சியின் சிற்பியாய், விடிவெள்ளியாய் ஒளிரும், வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மேலும், இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அவையை கண்ணியம் தவறாமல் நடத்திவரும் பேரவைத் தலைவர் அவர்களையும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும் வணங்கியும், நமது அரசு சட்டமன்ற கொறடா அவர்களையும் வணங்குகிறேன். மேலும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வணக்கம் தெரிவித்தும், என்னை இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சபைக்கு அனுப்பி வைத்த அந்தியூர் சட்டமன்ற தொகுதி மக்களையும், கழகத்தினரையும், தோழமைக் கட்சியினரையும் வணங்கி, செய்தி மற்றும் தமிழ் வளர்ச்சித் துறையில் எனது உரையை தொடங்குகின்றேன்.

திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை, திட்டங்களை மக்களிடத்தில் உடனுக்குடன் கொண்டு சேர்த்து விழிப்புணர்வை ஏற்படுத்தி சாதனை புரிந்துவரும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களுக்கு கனிவான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், இன்று மானியக் கோரிக்கையை சமர்ப்பிக்கும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், கனிவான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திராவிட மாடல் ஆட்சியைத் தந்துகொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அந்தியூருக்கு அரசு கலைக் கல்லூரி, ஊரக மக்களுக்கு குடிநீர்த் திட்டங்கள், பேரூராட்சி மக்களுக்கு குடிநீர்த் திட்டங்கள், மருத்துவமனைகள், பள்ளிக் கட்டடங்கள், அரசு அலுவலகங்கள், வணிக வளாகங்கள், நெடுஞ்சாலைத் துறை பாலங்கள், ஊரக வளர்ச்சித் துறை பாலங்கள், எழில்மிகு வாரச் சந்தைகள், அந்தியூர் தொகுதியில் சாலை வசதிகள், பர்கூர் மலைப் பகுதியில் சாலை வசதிகள், மின் மயானங்கள், பேருந்து வசதிகள் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை அந்தியூர் தொகுதிக்கு வழங்கி, வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனை படைத்து, மக்களைக் காப்பாற்றி வருகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கும் அந்தியூர் தொகுதி மக்களின்சார்பாக இதயமார்ந்த நன்றி மலர்களை தங்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

### திருக்கோயில்கள் குடமுழுக்கு!

அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள அருள்மிகு ஸ்ரீபத்ரகாளியம்மன் திருக்கோவில், அருள்மிகு ஸ்ரீசெல்லீஸ்வரர் வகையறா திருக்கோயில், எண்ணமங்கலம் அருள்மிகு ஸ்ரீசெலம்பூரம்மன் திருக்கோயில், பெருந்தலையூர் அருள்மிகு மகிழீஸ்வரர் திருக்கோயில், பெருந்தலையூர் அருள்மிகு பெருமாள் கோயில் மற்றும் சவண்டப்பூர் அருள்மிகு செல்லாண்டியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு அத்தியாவசியமான பணிகளைச் செய்து, விரைவில் குடமுழுக்கு விழா நடத்திட வேண்டுமென அமைச்சர் அவர்களைத் தங்களின்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

சுதந்திரப் போராட்டத்திற்காகப் போராடிய தியாகி தீரன் சின்னமலை அவர்களின் தளபதிகளாக விளங்கிய திரு. குணாளன் நாடார் அவர்களுக்கும், வல்வில் ஓரி அவர்களுக்கும் விரைவில் வெண்கலச் சிலையுடன்கூடிய நினைவு மணிமண்டபம் அமைத்துத் தர வேண்டுமென்று தங்களின் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அந்தியூருக்கு அரசு மருத்துவமனை, காவல் நிலையம், பேரூராட்சி அலுவலகம், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றுக்கு இடம் கொடுத்த அந்தியூர் கொடை வள்ளல், அந்தியூர் பேரூராட்சியின் முதல் பேரூராட்சித் தலைவராக விளங்கிய அமரர் வேலாயுதம் பிள்ளை அவர்களுக்கு அந்தியூர் பேரூராட்சி அலுவலகத்தில் வெண்கலச் சிலை அமைக்க அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### தீயணைப்பு நிலையம்!

அந்தியூரில் நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் ஒதுக்கீடு செய்து முடிவுற்ற நிலையில், விரைவில் நீதிமன்றம் கட்டித் தர வேண்டுகிறேன். மேலும், அந்தியூர் தொகுதியில் கோபிபொலவக்காளிபாளையத்திலும், அந்தியூரிலும் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், விரைவில் தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தியூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் நீண்ட கால கனவு மானாவாரி விவசாய பூமிகளுக்கு பாசனத் திட்டம் தேவை என்பதே ஆகும். தொகுதியின் கிழக்கில் காவிரியாறு, மேற்கில் பவானி ஆறு ஆகியவை ஓடினாலும், இன்றுவரை அந்தியூர் தொகுதியின் பெரும்பான்மை விவசாயிகள் மானாவாரி விவசாயமே செய்து வருகிறார்கள். அந்தியூர் தொகுதியின் பாசனத் திட்டத்திற்காக பவானி ஆற்றின் உபரி நீரை pumping முறையில், அந்தியூர் மற்றும் அம்மாபேட்டை ஒன்றியங்களில் உள்ள ஏரிகளில் நிரப்பிடும் திட்டத்தின் ஆய்வறிக்கையைத் தயார் செய்திட, நிதி கோரி கோப்புகள் நிதித் துறையில் உள்ள நிலையில், முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு வழங்கி ஆய்வறிக்கை தயார் செய்து, முழுமையாக இத்திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அந்தியூர் விவசாயப் பெருமக்களின் உணர்வுகளையும், எண்ணங்களையும் தங்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

மேலும், பர்கூர் மலைப் பகுதியிலிருந்து மழைக்காலத்தில் வருகின்ற காட்டாற்று வெள்ளம் அந்தியூர்அம்மாபேட்டைகொளத்தூர்கோவிந்தபாடி வழியாக மேட்டூர் அணைக்கு பெரு வெள்ளமாகச் செல்லும் தோணிமடுவு பள்ளத்தில் தடுப்பணைகள் அமைத்து, பொதுப் பணித் துறை வாய்க்கால்கள் மற்றும் pumping மூலம் நிறைவேற்றிடக் கோரிய நிலையில், வனத் துறை மற்றும் பொதுப் பணித் துறை ஆகிய இரு துறைகள் காலதாமதத்தைத் தடுத்திட, வனத் துறையின்மூலம் மட்டும் தோணிமடுவு பள்ளத்தில் தடுப்பணைகள் அமைப்பதன் மூலம் அந்தந்த பகுதிகளில் உள்ள வன விலங்குகளுக்கு நீராதாரத்தை ஏற்படுத்துவதுடன், வனப் பகுதியையொட்டியுள்ள அகழிகள்மூலம் அனைத்துப் பகுதிகளில் உள்ள வன விலங்குகளுக்கு நீராதாரத்தை ஏற்படுத்திட முடியும்.

இதன்மூலம் வன விலங்குகள்மனித மோதல்கள் ஏற்படாது. உயிரிழப்புகளும் தடுக்கப்படும். மேலும், அகழிகள்மூலம் நீரைக் கொண்டுசெல்வதால் எல்லைகளில் உள்ள விவசாய நிலங்களிலும் நிலத்தடி நீர்மட்டம் உயரும். மேலும், காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்து வரும்பொழுது, அருகிலுள்ள ஏரிகளும் நிரம்பும். இதன்வாயிலாக வன விலங்குகளும், விவசாயிகளும் முழுமையாகப் பயனடைய இயலும். ஆகவே, வனத் துறையின்மூலம் தோணிமடுவு வனப் பகுதிக்குள் பெரிய அளவில் தடுப்பணைகள் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மேட்டூர் உபரி நீர்த் திட்டத்தை அனைத்துப் பகுதிகளும் பயனடையும் வகையில் நிறைவேற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்று நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்கள். அந்தச் சூழ்நிலை வரும்பொழுது, அந்தியூர் மற்றும் அம்மாபேட்டை விவசாயிகளின் நூற்றாண்டு கால கோரிக்கையான இத்திட்டத்தையும் செயல்படுத்தி, அந்தியூர் பகுதிக்கும் சேர்த்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தியூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள 32 கிராம ஊராட்சிகளில் 17 கிராம ஊராட்சிகளுக்கு குடிநீர்த் திட்டத்திற்காக முதல்கட்ட நிதியினை வழங்கியமைக்கு நன்றியினைத் தெரிவித்து, மீதியுள்ள இரண்டாம் கட்ட நிதியினை தந்திட உத்தரவு வழங்கி, 32 கிராம ஊராட்சிகளுக்கும் குடிநீர் வசதி செய்து தந்திட வேண்டுகிறேன். மேலும், பேரூராட்சித் துறையின்மூலம் வாணிப்புத்தூர் பேரூராட்சிக்கு புதிய குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தந்திட வேண்டுகிறேன்.

பவானி ஆற்றின் கரையில் அமைந்துள்ள கோபிச்செட்டிபாளையம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அம்மாபாளையம் கருவல்வாடிப்புதூர் பகுதிகளுக்கிடையே அவசர கால மாரடைப்பு நோயாளிகளும், கர்ப்பிணிப் பெண்களும் மற்றும் பள்ளிக் குழந்தைகளும் ஆபத்தான முறையில் பரிசலில் ஆற்றைக் கடப்பதை தடுத்திட அம்மாபாளையம்கருவல்வாடிப்புதூர் இடையே உயர்மட்டப் பாலத்தை ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் அமைத்திட திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்படும் நிலையில், விரைவில் இப்பாலம் கட்டும் திட்டத்தை தொடங்கி வைக்க வேண்டுகிறேன்.

மேலும், பொதுப் பணித் துறையால் பவானி ஆற்றின் குறுக்கே பங்களாபுதூர்கோபிச்செட்டிப்பாளையம் செல்லும் வழியில் ஆங்கிலேயர் காலத்து இரும்புப் பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்ட அனைத்துப் பணிகளும் முடிவுற்றுள்ள நிலையில், அத்தாணிசத்தியமங்கலம் சாலையிலுள்ள நாராயணகொம்பு பள்ளத்தின் பழைய குறுகலான பாலத்தையும் கட்ட அனைத்துப் பணிகளும் முடிவுற்று, நிதி ஒதுக்கீட்டுப் பட்டியலில் உள்ள நிலையில் இந்த இரு பாலங்களையும் இந்த நிதியாண்டிலேயே கட்டித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அந்தியூர், செம்புளிச்சாம்பாளையத்தில் ஊரின் முன்புறமுள்ள நான்கு ரோடு சந்திப்பு இடத்திலும், பவானி கைகாட்டிப் பிரிவிலுள்ள மூன்று ரோடு சந்திப்பிலும் ரவுண்டானாக்கள் அமைத்து அந்தப் பகுதிகளில் ஏற்படுகின்ற விபத்துகளைத் தடுத்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தியூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தற்காலிகமாக இயங்கி வரும் அந்தியூர் அரசு கலைக் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுகிறேன்.

### சாதிச் சான்றிதழ்கள்!

அந்தியூர் தொகுதியில் வசிக்கும் பண்டிபோயர் மற்றும் கொண்டாரெட்டி இருளர் இன மக்கள் பழங்குடியினர் பிரிவில் இருந்தாலும், நடைமுறையில் இந்த இரு இன மக்களுக்கும் சாதிச் சான்றிதழ்கள் ஈரோடு மாவட்டத்தில் வழங்கப்படுவதில்லை. பண்டிபோயர் மற்றும் கொண்டாரெட்டி இன மக்களுக்கு சாதிச் சான்றிதழ்கள் வழங்கிட வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிட்டு, அவர்களுக்கு உடனடியாக சாதிச் சான்றிதழ்கள் வழங்கிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோடு மாவட்டத்திலுள்ள அந்தியூர், பர்கூர் மற்றும் தாளவாடி மலைப் பகுதிகளில் வாழும் மலையாளி இன மக்கள் பொதுப் பிரிவினராகவே கருதப்படுகின்றார்கள். அவர்களுக்கு பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் வழங்கப்படுவதில்லை. (மணியடிக்கப்பெற்றது) ஆனால், சேலம் மாவட்டத்தில் அவர்களுக்கு பழங்குடியினர் என சான்றிதழ் வழங்கப்படுகிறது. கடந்த 2019 ஆம் ஆண்டு ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட இதுகுறித்த கோப்பு இன்னும் நிலுவையில் இருக்கிறது. ஆகவே, முதலமைச்சர் அவர்கள் இதற்கு குரல் கொடுத்து, மலையாளி இன மக்களுக்கு கண்டிப்பாக பழங்குடியினர் சான்றிதழ் வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தியூர் தொகுதியில் சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட விவசாய நிலங்களில் விவசாயம் செய்து வரும், மூன்று தலைமுறைகளுக்கு மேலாக நத்தம், கரடு புறம்போக்கு, அனாதீனம் மற்றும் நத்தம் நீர்த்தன் போன்ற வகையினயிடங்களில் வீடு கட்டி வசித்து வரும் மக்களுக்கு விரைவாக எளிய முறையில் பட்டா வழங்கிட வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு உரையாற்ற வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கும், தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் இதயமார்ந்த நன்றியினையும், வாழ்த்தினையும் தெரிவித்து, “போராடுவோம்! வெற்றி பெறுவோம்!” “வெல்வோம் இருநூறு! படைப்போம் வரலாறு!” என்று கூறி, என்னுடைய தொகுதி சார்ந்த கோரிக்கைகளைத் தங்களிடம் அளிக்கிறேன். தாங்கள் அவற்றை நான் பேசியதாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

### தொகுதி கோரிக்கைகள்:

அந்தியூர் தொகுதியில் 25 ஆண்டுகளுக்கு முன்னர் அரசு சார்பில் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளில் இரண்டு தலைமுறையாக வசித்து வரும் நிலம் இல்லாதவர்களுக்கு அரசு சார்பில் வீட்டு மனை மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டுகிறோம்.

அந்தியூர் தொகுதி, நகலூர் புதூர், பொலவக்காளிபாளையம் ஊராட்சியின் பெரியார் நகர், இந்திரா நகர், வெள்ளித்திருப்பூர் ஊராட்சியின் குரும்பபாளையம், சென்னம்பட்டி ஊராட்சியின் அண்ணா நகர், எம்.ஜி.ஆர் நகர், மாத்தூர் ஊராட்சியின் கல்லஓரன்கோட்டை மற்றும் பெருந்தலையூர் ஆகிய இடங்களில் சமுதாய கூடங்கள் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

அந்தியூர் தொகுதி, பர்கூர் ஊராட்சியிலுள்ள மாதேஸ்வரன் சுவாமியானது துருசணாம் பாளையத்தில் கால்நடைத்துறைக்கு சொந்தமான மந்தைப் புறம்போக்கு இடத்தில் உள்ளது. கால்நடைத் துறைக்குச் சொந்தமான அந்த இடத்தை வகைமாற்றம் செய்து, அடிப்படை வசதிகளை மேம்படுத்திட வேண்டுகிறேன்.

அந்தியூரில் அரசு தொழிற்பயிற்சி மையம் தொடங்கிட கேட்டுக்கொள்கிறேன். அந்தியூர் தொகுதி, கோவில்நத்தம் பெரிய செங்குளம் வழியாக குட்டையூர் மாக்கம்பாளையம் வரை உள்ள வனச் சாலையையும், பர்கூர் மெயின் சாலை முதல் வேலாம்பட்டி மட்டிமரத் தள்ளி வரை குட்டையூர் வரையிலான சாலையையும் புதிய சாலையாக அமைத்திட வேண்டுகிறேன்.

### சுற்றுலாத் தலம்!

அந்தியூர், கோவையிலிருந்து திருப்பதி செல்லும் பேருந்தை சத்தியமங்கலம்டி.என். பாளையம்அத்தாணிஅந்தியூர் வழியாக நீட்டித்து இயக்கிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்தியூரிலிருந்து மாதேஸ்வரன்மலை செல்லவும், திருநள்ளாறு செல்லவும், புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி செல்லவும், மேட்டூர் மற்றும் ஈரோட்டில் இருந்து செல்லும் பேருந்துகளை அந்தியூரிலிருந்து நீட்டித்து இயக்கிட கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டுப்பாளையம் ஆனந்த சாகரம் ஏரி, கெட்டி சமுத்திரம் ஏரி, டி.என். பாளையத்தின் சஞ்சீவிராயன் குளம், தாமரைக்கரை ஏரி மற்றும் ஈரெட்டி நீர்வீழ்ச்சி ஆகியவற்றை சுற்றுலாத்தலமாக மாற்றிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். பர்கூர் மலைக்கிராம ஊராட்சிக்கு ஏற்கெனவே உள்ள நீராதாரங்களைக் கொண்டு குடிநீர் வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

அந்தியூர் தொகுதி, 30 குக்கிராமங்களுக்கும் திறந்தவெளி கிணறு அமைத்து, மேல்நிலை நீர்த்தொட்டிகள் கட்டி, குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வழங்கிட வேண்டுகிறேன்.

அந்தியூர் தொகுதி, அருள்மிகு குருநாதசாமி திருக்கோவில் தேர்த் திருவிழாவிற்கு ஒருநாள் மாவட்ட விடுமுறை வழங்கிட வேண்டும். மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான தொகுப்பூதிய ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கி பணி நிரந்திரம் செய்திட வேண்டும். மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் வழங்கப்படும் வீடுகளுக்கு முன் வைப்புத்தொகை இல்லாமல் வழங்கிட வேண்டும். அந்தியூர் தொகுதி, டி.என்.பாளையம் ஒன்றியம், வன எல்லையில் அகழிகளை ஆழப்படுத்தி முழு நீளத்திற்கு கம்பி வேலிகள் அமைத்திட வேண்டும்.

அந்தியூர் தொகுதி, வன விலங்கு மோதல் தடுப்பு ஆட்கள், வன விலங்கு ஏற்படுத்தும் சேதத்தை ஆய்வு செய்து நிவாரணம் வழங்கிட விரைவு பதிலளிப்புக்குழு அதிகளவில் அமைத்திட வேண்டும்.

அந்தியூர் உபகோட்டத்தினை தனி உட்கோட்டமாக அறிவித்திட வேண்டுகிறேன். அந்தியர் கொள்ளேகால் சாலையில் முருகன் கிணறு நான்குமுனை சந்திப்பு மற்றும் மூலக்கடை பிரிவு ஆகிய சாலை சந்திப்புகளில் சாலை சந்திப்பு மேம்பாடு செய்து தர வேண்டும். கெட்டிசமுத்திரம் ஏரிக்கரையை அகலப்படுத்தி, வெள்ள தடுப்புச் சுவர் அமைத்திடவும், கோபிச்செட்டிபாளையம் ஊராட்சி ஒன்றியம், சவுண்டப்பூர் ஊராட்சி, கணபதிபாளையத்தில் வடிகால் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தியூர் தொகுதி, பர்கூர், தாமரைகரை புதிய துணை மின் நிலையம் அமைக்கும் பணியினை இந்த நிதியாண்டிலேயே தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பர்கூர் மலைப்பகுதிக்கு கேபிள் மூலம் மின்சாரம் கொண்டு செல்லும் திட்டத்தை விரைவில் செய்லபடுத்திட வேண்டும்.

அந்தியூர் தொகுதியிலுள்ள 32 கிராம ஊராட்சிகள் மற்றும் 5 பேரூராட்சிகளிலும் உள்ள சாலைகளுக்கு தார்ச் சாலைகள், கான்கிரீட் சாலைகள் அமைத்து வடிகால் வசதிகளை சிறப்பு நிதி தந்து செய்திட வேண்டும்.

அந்தியூர் தொகுதி, வாணிப்புத்தூர், அத்தாணி, மேட்டுப்பாளையம், கூகலூர், அந்தியூர் கோபிச்செட்டிப்பாளையம், சவண்டப்பூர் ஊராட்சி, கணபதிபாளையம் ஆகிய ஊர்களில் சாக்கடை வசதி செய்து தர வேண்டும். அந்தியூர் அரசு கலைக் கல்லூரிக்கு புதிய கட்டடம் மற்றும் புதிய அரசு தொழிற்பயிற்சி மையம் அமைத்திட வேண்டும். அந்தியூர் அரசு தாலுகா மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேன் வசதியும், கூடுதல் படுக்கைகள் மற்றும் கூடுதல் கட்டடங்கள் அமைத்திட வேண்டும்.

அந்தியூர் தொகுதி, தாமரைக்கரையில் அரசு ஆரம்ப சுகாதார நிரலையம் அமைக்க வேண்டும். வேம்பத்தி (அ) பிரம்மதேசம் ஊராட்சியில் ஒரு புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்குப் பகுதி இளைஞர் அணி சார்பில் கே.டி.ஆர். பாலமுருகன் ஏற்பாட்டில் பகுதிச் செயலாளர், 1வது மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு தலைமையில் 13வது வார்டு சாத்துமாநகரில் கோடை வெளியில் இருந்து பொதுமக்களை காக்கும் வகையில் தண்ணீர் பந்தல் திறந்து வைத்து தர்பூசணி, மோர், ஜூஸ், வெள்ளரிக்காய் ஆகியவை வழங்கப் பட்டன. இதில் டி.ஏ.ராஜ், எம்.வி.குமார், இரா.குமரேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில்

# சட்டமேதை அம்பேத்கர் பிறந்தநாள் - சிலைக்கு மரியாதை!

## கே.பி. சங்கர் எம்.எல்.ஏ. மலரஞ்சலி செலுத்தினார்!

சென்னை,ஏப்.18–

சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135ஆவது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாநில மீனவரணி துணை தலைவர், திருவெற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் அவர்கள் திருவொற்றியூர் நெடுஞ்சாலை டோல்கேட் பகுதியில் அமைந்துள்ள அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து உறுதிமொழி ஏற்று மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்வில் கழக பொதுக்குழு உறுப்பினர் வி.இராமநாதன் செயற்குழு உறுப்பினர் இரா.முருகேசன், மத்திய பகுதி பொருளாளர் எம்.எஸ்.நாகலிங்கம், முன்னாள் பகுதி இணைச் செயலாளர் இ.ரமேஷ், 14வது (ஆ) வட்டச் செயலாளர் ஏகா.கார்த்திகேயன் மாவட்ட பிரதிநிதி கே. கார்த்திகேயன் ஜெ.பி.சந்தானகிருஷ்ணன், எம்.எத்திராஜ், k.கார்த்திக், ஆர்.அப்துல்சலிம், ஆர். இமயவரம்பன், கழக பேச்சாளர் எழும்பூர் கோபி, மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் கே.தேசிங், துணை அமைப்பாளர்கள் எஸ்.செல்வம், டி.மகேந்திரன், ஆர்.குமரன் ஜி.முரளி எம்.எல்.வேலன், எஸ்.கேஇளங்கோ, மாவட்ட வர்த்தக அணி துணைத்தலைவர் பிரட் சுரேஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.கார்த்திக், டெய்லர் மணி, கே. எஸ்.ஆனந்தன், எஸ்.முத்துராஜ் ஜெ.கருணாநிதி, ஜெ.சுந்தரம் ரவிச்சந்திரன், வீ.சி.கிருஷ்ணன், எஸ்..சரவணன், டைலர் பாபு, எம். கலோஷா லோகித் குமார், ஞானம், காஜா, நேவி, ராஜ், விக்டர், பி.ஸ்.இளங்கோவன், கோபி, லாரன்ஸ், தாமஸ், சண் ராஜி, நாசர், சபேஸ், டி.என்.பிரோம், கழக தோழர்கள் மற்றும் பொதுமக்கள்கள் கலந்து கொண்டு புகழ் அஞ்சலி செலுத்தினர்.



அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களின் ஆலோசனைப்படி.156 வது வட்ட திமுக சார்பில் அவைத் தலைவர் வி.எம். பழனி தலைமையில் வட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆலந்தூர் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ப.குணாளன் கலந்துகொண்டு கழக ஆக்கப் பணிகள் குறித்து நல்ல பல ஆலோசனைகள் வழங்கினார். வட்டத்துக்குட்பட்ட அனைத்து கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.